ஓம்
சிவாய நம



# திரு. ஆறுமுகம் சதாசிவம்
# திருமதி பரமேசுவரி சதாசிவம்
# நினைவு மலர்

15-11-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப விளக்காய் குலவிய அன்னை



## அமரர் திருமதி பரமேசுவரி சதாசிவம் அம்மையார்

**தோற்றம்** 28-08-1932

**மறைவு** 30-10-1986

### திதிநிருணய வெண்பா

ஆயதோர் அட்சயவாண் டைப்பசித் தேய்பிறைநாள்
ஏயதிர யோதசிதான் என்னவே - வேயனதோள்
மாதுபர மேஸ்வரியார் மன்றாடி குஞ்சித
பாதமலர் உற்றார் பகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காணிக்கை

மன்னுமெங்கள் இல்லத்தில் வாழும் தெய்வங்கள்
மருவிவரும் எழுமைதொறும் பயின்ற தெய்வங்கள்
துன்பகற்றி நலம்பேணிக் காத்த தெய்வங்கள்
தொல் தமிழர் பண்பாட்டில் காத்த தெய்வங்கள்
இன்புமலி "மான்குடி ரீச்சர்" என்றும்
அன்புமிகு சதாசிவ வாத்தி என்றும்
இளங்குதலை மாணவர்கள் ஏந்தும் தெய்வங்கள்
பொன்னனையார்களுக்கு இம்மலரைச் சூட்டுகின்றோம்
புகழுடம்போ டென்றுமவர்கள் பொலிவார் நன்றே.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பொறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

டாக்டர் முருகு. நல்லசேகரம்பிள்ளை
4, மல்லிகா பில்டிங்,
பொகவந்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாளர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

திருவாளர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் புலவர் பெருமக்களையும், வைத்திய மேதைகளையும், நாடக இசைக் கலைஞர்களையும், சிவநெறிச் சீலர் பலரையும் தந்து புகழ்பூத்த வட்டுக்கோட்டை கலைநகரிலே புகழ்பெற்ற புண்ணர் ஆறுமுகம் அவர்களுக்கும் – அருமை மனையாட்டி சின்னக்குட்டி வயிருப்பிள்ளைக்கும் அரும்பெரும் கடைக்குட்டி மகனாக 1925ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் நாள் (1925-09-25) தோன்றினார். அவர் உடன்பிறப்புக்களாவன திருமதி. இராமசாமி மாணிக்கம், திருமதி. வேலுப்பிள்ளை அன்னமுத்து, திரு. ஆ. கதிரவேலு, திருமதி. கந்தையா தங்கமுத்து, திருமதி. தம்பிராசா ஆச்சிமுத்து, திரு. ஆ. குமாரசாமி, திரு. ஆ. வேலாயுதம் ஆகியோராவர்.

தனது ஆரம்பக் கல்வியை வட்டு.திருநாவுக்கரசு வித்தியாசாலையில் பயின்றார். 1942 கனிஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (J.S.C.) எல்லாப் பாடங்களிலும் மிகத்திறமையாக சித்தியடைந்தார். 1944ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை (S.S.C.) சித்தியடைந்தார். ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக 1945ல் அராலி இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிகளில் சென்று கற்றார். 1946ல் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து 1949ம் ஆண்டில் ஆசிரிய நியமனம் பெற்றார். 1952ம் ஆண்டு தொடக்கம் 1953ம் ஆண்டு வரை நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார்.

பின்னர் தனது ஆசிரியப் பணியை தெஹிவளை M.M.T. பாடசாலை, கல்ஸ்டோவ் M.M.T. பாடசாலை, முல்லைத்தீவு இந்து மகா வித்தியாலயம், புதக்குடியிருப்பு இந்து மகா வித்தியாலயம், வட்டு.திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, அராலி இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மேற்கொண்டார். தனது ஆசிரியப்பணியினை மேற்கொண்ட பொழுதே 1970ம் ஆண்டு இளங்கலைமானிப் பட்டம் (B.A.) பெற்றார். இவரது படிப்பின் ஆர்வத்தாலேயே குடும்ப சுமையுடனும் தனது படிப்பை மேற்கொள்ளக் கூடியதாய் இருந்தது. இதற்கு அவரது துணைவியாரே காரணமாவார். பின்னர் 1973ம் ஆண்டு இலங்கை கல்விச் சேவை Vம் பிரிவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் சித்தியடைந்தார். IIம் தர அதிபராக தெரிவு செய்யப்பட்டபோது அப்போது தமிழரசுக் கட்சியின் கொள்கைப் பிடிப்பின் காரணமாக வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. தியாகராசா அவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. அதிபர் பதவி கிடைக்காத போதும் தொடர்ந்து 36 வருடங்கள் ஆசிரியப்பணி புரிந்து 15-09-1985ல் ஓய்வு பெற்றார். இவரால் பல்துறைக் கல்விமான்கள் பலர் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓய்வு பெறும் பொழுது வட்டு-இந்துக்கல்லூரியில் கல்வி கற்பித்தார்.

வட்டுக்கோட்டை மக்களின் அறிவாலயமாக விளங்கிய வட்டு.காந்திஜீ சனசமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்க ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் ஆரம்பகால செயலாளராக பணியாற்றினார். ஆரம்பகால செயலாளராக தொடர்ந்து சில வருடங்கள் ஆற்றிய பணி இன்றும் பாராட்டப்படுகின்றது. வட்டுக்கோட்டை சைவ வாலிபர் கழக நிர்வாக உறுப்பினராகவும், மணிவாசகர் சங்க நடத்துனராகவும் இருந்து சைவத்தை வளர்த்தது குறிப்பிடத்தக்கது. வட்டு.சிவன் ஐக்கிய பண்டகசாலை செயலாளராகவும், பொருளாளராகவும், தலைவராகவும் மாறிமாறி இருந்து பணிபுரிந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முழுப்பயனையும் மக்கள் அடையச் செய்தார்.

பண்டகசாலைக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு காரணகர்த்தாக்களில் இவரும் ஒருவராவர். இப்பணிகளின் காரணமாகவே சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதியாகவும் பணிபுரிந்தார். கலைநகர் நேருஜீ சனசமூக நிலைய ஸ்தாபகரில் ஒருவராகவும், தலைவராகவும் இருந்து பணிபுரிந்தார். சிவச்செல்வி கலாமன்ற நிர்வாகியுமாவார். மேற்படி சங்கங்களின் மூலம் கல்வி, கலை வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்ததுடன் மாலை நேரங்களில் நுண்கலை வகுப்புகள் நடத்தினார். மேலும் வட்டுக்கோட்டையில் நடாத்தப்பட்ட கலைவாணி கல்வி நிலையத்தில் ஆலோசகராக இருந்து பிரதி உபகாரம் நோக்காது பாடம் கற்பித்து வந்தார். அவரது குலதெய்வமாகிய கலைநகர் கம்பன்புலோ ஆதி வைரவப் பெருமான் அபிவிருத்திச்சபைத் தலைவராக இருந்ததுடன் பூசைகள் சிறப்பாக நடைபெறச் செய்தார். இவர் திருவெம்பாவை 7ம் பூசை - பிட்டுக்கு மண் சுமந்த பூசை மிகச் சிறப்பாக செய்பவருமாவார். வட்டுக்கோட்டை அருள்மிகு காசி விசாலாட்சி விசுவநாதர் தேர்த்திருப்பணிக்கும், மடத்திருப்பணிக்கும் செயலாளராக இருந்து பணி புரிந்ததுடன் அக்கோயிலில் நடைபெறும் திருவிழாவில் இவர்களின் வம்ச திருவிழாவாகிய 7ம் திருவிழாவை மிகப் பெரிதாக செய்வதில் முன்னின்று உழைத்ததுடன் 7ம் திருவிழாச் சங்க தலைவர், பொருளாளராகவும் பணிபுரிந்தார். ஓய்வு பெற்ற காலத்தில் இவ்வாலய சிதம்பர நடராஜப் பெருமானுக்கு மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி அணிவித்து அழகு பார்த்து ஆனந்தம் அடைந்தார். மானிப்பாய் மருதடி விநாயகர் 14ம் திருவிழா சங்க தலைவராகவும், நிர்வாக உறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

மேலும் வட்டுக்கோட்டை பெற்றோர், ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினராக இருந்தார். முல்லைத்தீவு தமிழாசிரிய சங்க செயலாளராக பணிபுரிந்தார். இராச வைத்தியர் அ.க.குமாரசாமி (வட்டு.வீரபத்திர சிவன் தர்மகர்த்தா) அவர்களின் பாராட்டுவிழா இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்து பணிபுரிந்தார். இவ்வாறு இன்னும் பல பொதுச் சேவைகள் செய்தமை போற்றத்தக்கது.

இவர் ஆசிரியத் தொழிலைப் புரிந்த காலத்தில் ஆசிரியையாகிய தனது மைத்துனி கந்தசாமி அன்னலட்சுமி தம்பதிகளின் ஏகபுதல்வியாகிய பரமேஸ்வரியை காதலித்து பெற்றோரின் ஆசியுடன் திருமணம் புரிந்தார்.

திரு. ஆ. சதாசிவம் அவர்கள் காதற் கற்பினையுடைய தன் உள்ளக் கிழத்தியாம் பரமேஸ்வரியோடு அன்பாற் கலந்து இன்பவாழ்க்கை தொடங்கிய எல்லையிலிருந்து அவர்கள் வாழ்க்கை பரோபகார வாழ்க்கையாகவே மிளிர்ந்து வந்துள்ளது. விருந்தோம்பல் என்பது இவர்கள் உதிரத்தோடொட்டிய ஒரு பண்பாக இருந்தது. பசித்து வந்தோர்க்கு உணவளிப்பது, இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென்னாது இயன்றளவு ஈவதும் இவரது குறிக்கோளாகும்.

இவர் கல்வியை கண்ணிலும் மேலாக மதித்து தன் பிள்ளைகள் ஒன்பது பேரையும் கல்விமான்கள் ஆக்கியதுடன் 1954ல் சகோதரன் ஆ.கதிரவேலு இறையடி சேர அவரின் மகன் கதிர்-சதா-கனகராசா அவர்களை வைத்திய கலாநிதிக்குப் படிப்பித்தார். அக்குடும்பத்தையும் தாபரித்தார்.

நாட்டின் தற்போதைய சூழலினால் சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து வட்டக்கச்சியில் உறவினர் வீட்டில் சில காலம் தங்கியிருந்து பின் தன் விருப்பப்படி மூத்த மகளிடம் பொகவந்தலாவ வந்தடைந்தார். பின் சில காலத்தில் சுகவீனமுற்று 27-10-96ல் சிவபதம் அடைந்தார். மக்கள், மருமக்கள், பேரர்கள், உற்றார், உறவினர் கலந்து கதற, ஊரவர் துக்கத்தில் பங்கு கொண்டு சிறப்பிக்க பொகவந்தலாவ பொது மயானத்தில் பூதவுடல் பஞ்சபூதத்துடன் சங்கமமானது.

*எல்லாம் வல்ல சிவன் அன்னார் ஆத்மாவை*
*தன் பாதத்தில் வைக்க அருள் புரிவாராக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் கதறல்

அப்பா, அப்பா எங்கள் ஒன்பதின்மரையும் வளர்க்க எவ்வளவு பாடுபட்டிருப்பீர்கள். அம்மாவும் தாங்களும் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டு எங்களையும் பராமரித்து, படிப்பித்து வருவதென்றால் எவ்வளவு பாடுபட்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறோம் – கலங்குகிறோம். பத்து வருடத்தின் முன்பு அம்மாவும் திடீரென காலமாகியபோது எங்களைத் தங்கள் அன்புச் சிறைக்குள் பூட்டி வளர்த்து வழிகாட்டி நிலையாக்க தங்கள் சுகவீனத்தைப் பாராது செய்த பணிகள் நெஞ்சில் நிழலாடுகின்றன. அப்பா நீங்கள் சிறுவயதில் தாய், தந்தையை இழந்து பட்ட துன்பம் பிள்ளைகளுக்கும் வரக்கூடாது என்று எங்களிற்கு அளித்த ஊக்கம் சொல்லில் அடங்காது. முக்கியமாக தாங்கள் இருக்கும் போதே பெண்பிள்ளைகள் நால்வரும் திருமணம் செய்துவிடவேண்டும் என்று அதை நிறைவேற்றினீர்களே. அதை எவ்வாறு மறப்போம்?.

அப்பா, தங்கள் பிள்ளைகள் தங்கள் சொல் தட்டாது தங்கள் ஆசைப்படியே நடக்கும் என்ற பெருமிதத்துடன் நிம்மதியுடன் காலமானீர்கள். இறையடி சேர்ந்து என்றும் நித்தியானந்தம் பெறுவீர்கள். எங்களை என்றும் ஆசீர்வதித்துக் கொண்டிருங்கள் அப்பா.

மகள்
குமுதினி கலைச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை அறிஞர்

கல்வித்துறையில் தெளிந்த நீரோடை போன்ற அறிவு ஆற்றல் மிக்கவர். தமிழுக்கு சொல்லிலும் செயலிலும் தொண்டு செய்த இனிய மனிதர். இப்படிப்பட்டவரை இழக்கக்கூடாது. இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து அறிவு எனும் ஒளியை அள்ளிக் கொடுக்க வேண்டியவர் மறைந்தது எங்கள் இனத்திற்கு ஏற்பட்ட வறுமை என்றே நாங்கள் மனதார நினைக்கின்றோம். அவரை கடைசியாகக் காணவும், சொற்பநேரம் கதைக்கவும் கிடைத்ததை நினைத்து ஆறுதல் அடைகின்றேன்.

நடமாடும் கல்விக்கூடம் போல் கதைத்தால் ஒவ்வொரு வசனத்திலும் தமிழ்பற்றும், ஆழ்ந்த அரசியல் ஞானமும் கருத்தைக் கவரும் வண்ணம் இருந்தது.

நல்ல அப்பாவையும், அம்மாவையும் தந்து உங்களைக் கடவுள் ஆசீர்வதித்து விட்டார். வித்யாவுக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு. மனதைத் தேற்றி அவர்கள் காட்டிய வழி நடவுங்கள்.

அவருடைய ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்புறும்.

**திரு.வே.இ.அ.கனகசிவம்** (J.P.)
பொகவந்தலாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மாமா

பள்ளிப் பருவம் முதல் பாசமாய் பழகி
அள்ளி அன்பைத் தந்தென்னை அரவணைத்து
உள்ளத்தால் உரிமையுடன் உறவாடவென்று
பிள்ளைகள் திருமணத்தால் மேலும் பிணைப்பினை உண்டு பண்ணி
வைத்தினையே

நீள்பெருங் கடலெனும் வாழ்வு தனில்
சூழ் கலி நீங்கிடவும் சுகவாழ்வு வாழ்ந்திடவும்
நாள் எல்லாம் நல்லறிவுரைகள் பல கூறி
வாழ்வாங்கு வாழ்ந்து வழி காட்டினையே

சங்கீதம் சமயமொடு சித்திரம் சிற்பம்
சிறப்பொடு பயின்றதன் சான்று பரப்பி
தங்கத் தமிழ்மொழி தன்னில்
தலை சிறந்த ஆசானாய்
சங்கங்கள் பலதிற் தலைமை பூண்டு
சாதனைகள் பல படைத்து
மங்காத புகழோடு மண்ணுலகை விட்டே
விண்ணுலகு சென்றனையே

பல்கலையும் கற்றுப் பட்டமும் பெற்று
பண்புகள் பல கொண்ட ஆசானாய்
எல்லோரும் போற்றிடவே
எத்தனையோ நற்பணிகள் தானும் செய்து
வல்லவராய் நல்லவராய்
வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
தில்லை அம்பலத்தான்
திருவடி சேர்ந்தனையே

தி. சிவபாலன் (மருமகன்)
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா என்று யாரைத் தேடுவது

நண்பனுக்கு நண்பனாகவும்
மாமன் ஒரு தகப்பன்ஸ்தானத்தில் மாமனாகவும்
கலைகளில் சிறந்த கட்டழகனாகவும்
அன்பும் பண்பும் பகுத்தறிவும் நிறைந்த ஓர் ஆத்மா
எம்மை விட்டுப் பிரிந்து சென்றதோ.

ஊர் திரும்பிச் சென்றால் மாமா, மாமா என்று யாரைத் தேடுவது........
பூக்களும் மரங்களும் யாருடைய ஓசையைக் கேட்பது
மாலை கட்டும் அழகு எங்கே
சமையல் செய்யும் அழகு எங்கே
பின்னல் ஊசி பிடித்துப் பின்னும் அழகு எங்கே
இனி எங்கே தேடுவது.

உங்களுக்காக வாழ்ந்து காட்டிய உங்கள் துணைவியைப்
பிரிக்க முடியாது என்று காட்டுவதற்காகவா
அவர் இறைவனடி சேர்ந்த அதே மாதத்தில் சங்கமித்தீர்கள்

பிள்ளைகள் வருங்காலம் உங்களுடையது என்று எண்ணி
ஒவ்வொரு பிள்ளையையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தீர்கள்
ஆசானே நீ எங்கே உன் திறமை மங்கிவிடாது

மணிமணியாக கதைபேசும் மணிதீபா என்று அழைப்பீர்களே
எத்தனை எத்தனை அறிவுரைகள் இனி யாரிடம் கேட்பது
எப்பொழுதும் பிள்ளைகள் நெஞ்சிலும்
மருமக்களாகிய எங்கள் இதயங்களிலும் இருப்பீர்கள் என்றும்
இரண்டு பறவைகள் சங்கமித்து
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியை வேண்டி நிற்கும்

**திருமதி. சி. பிறேமா, தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மையா அம்மையா

அன்பை ஊட்டி அரவணைத்த அம்மப்பா நீங்கள் ஊரில் இருக்கும் போது எமக்கு அடிக்கடி கடிதம் போட்டு நலம் விசாரிப்பீர்களே. பின் எம்முடன் வந்ததிலிருந்து என்னை திரு, திரு என பேரன்புடன் அணைத்து முத்தம் இடுவீர்களே. அம்மையா நீங்கள் என்னைப் படிக்க வைக்க உங்கள் சுகவீனத்தைப் பார்க்காமல் கஸ்ரப்படுவீர்களே. நான் ஒரு டாக்டராக அல்லது பொறியியலாளராக வர வேண்டும் என படிப்பிப்பீர்களே. படிப்பில் எனது கவனக்குறைவைக் கண்டு என் பள்ளி ஆசிரியரை வரவழைத்து அவரிடம் என்னைக் கவனிக்கும்படி எத்தனை நாள் கூறியிருப்பீர்கள். எனக்கு சித்திரத்தில் ஆர்வம் ஊட்டியது நீங்கள் தானே. "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்று கூறி சித்திரம் வரைய வைப்பீர்களே. என்னைக் கோபம் வரும்போது அடித்தாலும் பின்னர் என் பேரன் என உச்சி மோந்து உனது நன்மைக்கே அடித்தேன் என்று கூறுவீர்களே. அம்மப்பா, நீங்கள் உங்கள் பேரப்பிள்ளைகள் அனைவரிலும் வைத்திருந்த அன்பை உங்கள் செயல் மூலம் நான் அறிவேன். அவ் அன்பை இனி எவரிடம் பெறப் போகின்றோம்.

**ந. ஓங்காரம்**
பேரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திருமுறைத் திரட்டு

திருமுறை 1

## திருஞானசம்பந்தர் அருளியது

1. பிடியத னுருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

2. தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே

3. அவ்வினை கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மை தீண்டப்பெறா திரு நீலகண்டம்

திருமுறை 2

## திருஞானசம்பந்தர் அருளியது

1. வேயிறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்து
என்னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

3. மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான் திருநீறே.

திருமுறை 3

## திருஞானசம்பந்தர் அருளியது

1. இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடங்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதென்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடு துறை அரனே

2. உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தையும் உகந்தனையே

3. தாயினும் நல்ல தலைவரென்று அடியார்
தம்மடி போற்றி இசைப்பார்கள்
வாயினு மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை 4

## திருநாவுக்கரசர் அருளியது

1. கருவுற்ற நாள் முதலாகவே நின்பாதமே காண்பதற்கு
உருகிற்று என்னுள்ளமும் நானும் கிடந்து அலந்து எய்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒரு பற்று இல்லாமையும் கண்டு இரங்காய் கச்சி ஏகம்பனே.

2. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே.

3. சலம்பூ வொடுதூப மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலும் உன்னைமறந் தறியேன்
உன்நா மமென்னா வின்மறந் தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலி கொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

திருமுறை 5

## திருநாவுக்கரசர் அருளியது

1. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

2. அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என்னம் பாலிக்கும் ஆறுகண்டு இன்புற
இன்னம் பாலிக்கும் ஓ இப் பிறவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

**திருமுறை 6**

## திருநாவுக்கரசர் அருளியது
### (திருத்தாண்டகம்)

1. ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி

2. தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல் அமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்றா எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய் நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டு உறையும் மணாளன்தானே.

3. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலும் காணா
அனல் உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

1. பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தா மறவாதே நினைக்கின்றேன் மனத்துனைன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை
நல்லூரருட் டுறையுள்
அத்தா வுனக் காளாயினி யல்லேலென லாமே.

2. அந்த நாள் உன் அடைக்கலம் புகுந்த
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய் உந்தன் வண்மை கண்டடியேன்
எந்தை நீஎனை நமர்தமர் நலியில்
இவன் மற்றென்னடி யாயென விலக்குஞ்
சிந்தையால் வந்து உன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன் கூருளானே.

3. மற்றுப் பற்றெனக் கின்றிநின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கரை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

4. மீளா வடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளா தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கு மடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரில்
வாழ்ந்து போதீரே.

5. தானெனை முன்படைத்தான் அஃதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்தி
வானெனவந் தெதிர்க்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தா னொடித்தான்மலை உத்தமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பயன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி·
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொழிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்ந்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## மாணிக்கவாசகர் அருளியது

1. முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

2. நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும் வண்ணம் அருளிவா றார்பெறுவார் அச்சோவே.

3. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே.
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

4. அரைசே பொன் அம்பலத்து ஆடும்
அமுதே என்று உன் அருள் நோக்கி
இரைசேர் கொக்கு ஒத்து இரவு பகல்
ஏசற்று இருந்தே லேசற்றேன்
கரைசேர் அடியார் களி சிறப்பக்
காட்சி கொடுத்து உன் அடியேன் பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ.

5. இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யார் உன்னை அறியகிற்பாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

## திருமாளிகைத் தேவர் அருளியது

1. ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளியது

2. சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

திருமுறை 10

# திருமந்திரம்

## திருமூலர் அருளியது

1. அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.

2. சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவசிவ என்னச் சிவகதிதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

திருமுறை 11

# திருமுருகாற்றுப்படை

## நக்கீரர் அருளியது

1. முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக் கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

2. குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்ந்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்

3. உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையோன் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

4. அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேல் என வேல்தோன்றும்– நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

5. காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பாரமாம் அறுமுகவா – பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணம்

## சேக்கிழார் அருளியது

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணம் ஒருமூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியாய் ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

# கந்தபுராணம்

## கச்சியப்பர் அருளியது

1. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

2. அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

3. மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறையுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்து அருளினானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கந்தநம ஐந்துமுகர் தந்த முருகேசநம கங்கை உமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீலமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தந்பரமதாம்
எந்தைநம என்றும் இளையோய்நம குமாரநம என்று தொழுதார்.

5. முழுமதி யன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமலர் அடியும் கண்டான் அவன் தவம் செப்பற் பாற்றோ.

6. ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்

7. நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்

8. தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகிநின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்

9. முண்டக மலர்ந்தன்ன மூவிருமுகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன் மவுலியும் கோல மார்பும்
எண்தரு கரமீராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பு மார்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்

10. வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியந்தாதி

## அபிராமிப்பட்டர் அருளியது

1. தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

2. என்குறை தீரநின்று ஏந்துகின்றேன் இனியான் பிறக்கின்
உன்குறையே அன்றி யார்குறைகாண் இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியராய்
தன்குறை தீரஎம்கோன் சடைமேல் வைத்த தாமரையே.

3. ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

4. நாயகி நான்முகி நாராயணி கைநளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநஞ்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
தாயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

5. சுந்தரி எந்தைத் துணைவி என் பாசத்தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோள்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பா

## இராமலிங்க வள்ளலார் அருளியது

1. அருட்ஜோதி தெய்வம் என்னை
ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தில் ஆடுகின்ற
ஆனந்த தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எல்லாம்
போற்று கின்ற தெய்வம்
போதாந்த தெய்வம் உயர்
நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கி ஒளி
ஈந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணிய வாறு
எனக்கு அருளும் தெய்வம்
தெருப் பாடல் உவந்து எனையும்
சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வம் அதே தெய்வம்

2. தாயாகித் தந்தையுமாய்
தாங்கு கின்ற தெய்வம்
தன்னில் நிகர் இல்லாத
தனித் தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்து கின்றார்
மனத்து அமர்ந்த தெய்வம்
மலரடி என் சென்னிமிசை
வைத்த பெரும் தெய்வம்
காயாது கனியாகக்
கலந்து இனிக்கும் தெய்வம்
கருணை நிதி தெய்வம் முற்றும்
காட்டு கின்ற தெய்வம்
சேயாக எனை வளர்க்குந்
தெய்வம் மகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வம் அதே தெய்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பண் ஏறும் மொழி
அடியார் பரவி வாழ்த்தும்
பாத மலர் அழகினைஇப்
பாவி பார்க்கில்
கண் ஏறு படும்
என்றோ கனவிலேனும்
காட்டென்றால்
காட்டுகிலாய் கருணை ஈதே
விண் ஏறும் அரிமுதலோர்க்
கரிய ஞான
விளக்கே என் கண்ணே
மெய் வீட்டின் வித்தே
தண்ஏறு பொழில்
தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும்
சகச வாழ்வே.

## கந்தரநுபூதி

### அருணகிரிநாதர் அருளியது

1. ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

2. செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லறஎன் றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

3. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவா வினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பெருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவளண் குணபஞ் சரனே.

5. பேராசை என்னும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூரர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந் தரனே.

6. அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவேள் இமையோர்
புரி தாரக நாக புரந்தரனே.

7. அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே.

8. ஆதார மிலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைத்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சிகா மணியே.

9. விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்கழல் என்று அருள்வாய்
மதிவான் துதல்வள் ளியைய ல்லதுபின்
துதியா விரதா சுர பூபதியே.

10. சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயும்நாள்
வாகா முருகா மயில்வாகனனே
யோகா சிவஞான உப தேசிகனே.

11. எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்து எனையாள்
கந்தா கதிர்வேல் அவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

12. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

## அருணகிரிநாதர் அருளியது

1. நாளென் செய்யும் வினைதான் என்
செய்யும் எனை நாடிவந்த
கோளென் செய்யும் கொடுங்கூற்று என்
செய்யும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே
வந்து தோன்றிடினே.

2. தண்டாயுதமும் திரிசூலமும்
விழத் தாங்கியுன்னை
திண்டாட வெட்டி விழவிடுவேன்
செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் னவிரோத
ஞானச் சுடர் வடிவான்
கண்டாயடா அந்தகா வந்துபார்
சற்றென் கைக் கெட்டவே.

3. விழிக்குத் துணை திருமென் மலர்ப்
பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா என்னும்
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்
கோடன் மயூரமுமே.

4. சேல்பட்டு அழிந்தது செந்தூர்
வயற்பொழில் தேங்கடம்பின்
மால் பட்டு அழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல் பட்டு அழிந்தது வேலையுஞ்
சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்தது இங்கு என்தலை
மேல் அயன் கையெழுத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்
தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனை
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கு ஒரு தாழ்வில்லையே.

# திருப்புகழ்

## அருணகிரிநாதர் அருளியது

1. கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முற்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனே
அக்கண மணமருள் பெருமாளே.

2. அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
அதிர வீசி வாதாடும் விடையி லேறு வராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேதனாராட
மருவு வானு ளோராட மதியாட
வசன மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாலி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீது லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
உளமு மாட வாழ்தேவர் பெருமானே

3. இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நிறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே

4. கருப்பற் றூறிற் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே

5. சரணகம லாலயத்தை அரைநிமிச நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பலவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணும் நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகுதிருவேரகத்தின் முருகோனே

6. அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடைந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி நன்குடிப் பெருமாளே

7. நாத விந்துக லாதி நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜா
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்த லப்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்ட லமீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரார்
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்வ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகாயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

8. பாதி மதிநதி போது மணிசடை
நாத நருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாயனரி திரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீள
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுச்சு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

9. காரணம தாகவந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாடுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

11. திருமக ளுலாவும் இருபுய முராரி
திருமுருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவும் அடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர் பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினை இலாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியின் அதிபார
இருதன விநோதப் பெருமாளே.

12. எருவாய் கருவாய் தனிலே உருவாய்
இதுவோ பயிராய் விளைவாகி
இவர்போய் அவராய் அவர்போய் இவராய்
இதுவோ தொடர்பாய் வெறிபோல
ஒருதாய் இருதாய் பலகோடி யதாய்
உடனே அவமாய் அழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயர்கா எனவோ அருள்தாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா எனவோர் தரமோது அடியார்
முடிமேல் இணைதாள் புனைவோனே.
முனிவோர் அமரோர் முறையோ எனவே
முதுசூ ரமவேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சேர் அழகார் பொழில் சூழ்
திரு வீதியில் வாழ் பெருமாளே.

13. அகரமு மாகி அதிபனு மாகி அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி இனிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனது முனோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ் களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்ச் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

14. பத்தியால் யான் உன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிற் கிரிவாசா
வித்தகா ஞான சத் திநிபாதா
வெற்றிவேலாயுத பெருமாளே.

15. இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவகுப்பு

## அருணகிரிநாதர் அருளியது

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததன தந்ததன – தனதானனா

எந்தவினையும் பவமும் எந்தவிடமும் படரும்
எந்தஇகலும் பழியும் எந்தவழுவும் பிணியும்
எந்தஇகழ்வும் கொடிய எந்தவசியுஞ் சிறிதும் – அணுகாமலே

எந்தஇரவும் தனிமை எந்தவழியும் புகுதல்
எந்தஇடமும் சபையில் எந்தமுகமும் புகலும்
எந்தமொழியும் தமிழும் எந்தவிசையும் பெருமை – சிதறாமலே

வந்தனைசெய் உன்சரண் நம்புதல் புரிந்தவருள்
வந்தநுதி அனந்தலும் நெஞ்சில் நினைவின்படிய
ரந்தரஉவந்த அருள் இதம்பெறுதென்றி நெடு – வலைவீசியே

வஞ்சவிழி கண்டநுறு கின்றபோதும் குமர
கந்தனென நன்கரைய உன்தெளிவு தந்துயர்வர்
உந்துபயமும் தனிமை உந்துவீரன் அஞ்சலென – வரவேணும்

தந்தனன தந்தனன டின்டிகுடி டின்டிகுடி
குண்டமட குண்டமட மண்டமென நின்றுமுர
சந்திமிலை பம்பைதுடி திண்டியமுழங்கும் ஒலி – திசைவீறவே

தண்ட அமர் மண்டசுரர் மண்டைநிண மென்றலகை
யுண்டுமிழ்தல் கண்டமரர் இந்திரன் வணங்குபத
தண்டைசிறு கிங்கிணி புலம்பிடவரும் பவனி – மயில்வாகனா

செந்தளிரை முந்துபடம் என்றுமை மருண்டுநிறை
சந்தவை எங்குலவு மந்திகுதிகொண்டயல் செறிந்த
கமுகின்புடைய துங்கிடவளைந்து நிமிர் – மடல்சாடவே

சிந்திய அரம்பை பலவின்கனியில் வந்துவிழ
மென்கனியுடைந்த சுளை விண்டநரை கொண்டசிறு
செம்பகவ னங்கள் வளர் தென்பழனி யம்பதியின் – முருகேசனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பழநி வகுப்பின் சுருக்கவுரை

எந்தவிதமான வினையோ, பாவமோ - விறப்போ, விஷமோ, துன்பமோ, பகையோ, பழியோ, குற்றமோ, நோயோ, இகழ்ச்சியோ, வசியமந்திரங்களோ, மருந்துகளோ சற்றேனும் என்னைச் சேராமல் இருக்கவும்

(2) இரவிலேயோ, தனிமையாயோ எந்த வழியிலும் போகவும், எந்தச் சபையிடத்திலும் பேசவும், எந்த மொழியோ இசையோ எனக்குக் கைவரவும் என்பெருமை சிதறுண்ணாமல் இருக்கவும்

(3) நான் உன்னை வந்தித்துக் கேட்ட வரத்தை நீ தர, நான் மகிழ்ச்சி பெறுவதுடன்

(4) யமன் வரும்பொழுது குமர! கந்தா நான் கூறத் தெளிவுதந்து, என் பயம்நீங்க, அஞ்சலென வரவேணும்.

(5-6) பறைகள் ஒலிக்க திருவடியிற் தண்டை, கிங்கிணி ஒலிக்கப் பவனிவரும் மயில்வாகனனே!

(7-8) செந்தளிரைப் பாம்பின் படமென்று அஞ்சின குரங்கு கமுகின் மடல்மேல் குதிகொள்ள மடல் தாக்குதலால் வாழை பலாப் பழத்தின் மேல் விழ, உடைந்த பலாப்பழத்தின் சாற்றில் சிறு செண்பகம் வளரும் பழநி முருகனே.

**மேன்மை கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெலாம்.**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.**

**தென்தில்லை மன்றுள் ஆடிபோற்றி**
**இன்றெனக்கு ஆரமுதம் ஆனாய்போற்றி.**

**இன்பமே சூழ்க!** **எல்லோரும் வாழ்க!**

ஓம் ஓம் ஓம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை – சித்தன்கேணி

கலைநகர் – சிவபுரம்

# அமரர் திரு. ஆறுமுகம் சதாசிவம்

பிறப்பு : 16-09-1925 இறப்பு : 27-10-1996

திதி : ஐப்பசி மாதம் அமரபட்சப் பிரதமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

## புன்னர்வம்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கலந்த நன்றிகள்

புன்சிரிப்பு காட்டி புகழுடன் வாழ்ந்து எம்மை வாழ்வித்த தெய்வம் 27–10–96 கூத்தப் பெருமாள் குரைகழல் அடைந்தார். அதுபோது எங்கள் துன்பத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், ஊரார், அன்பர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியோர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியம் என்பனவற்றில் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியவர்களுக்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

– குடும்பத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Cover Printed by [illegible] Colombo 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org